**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.1337/2019 பெயர் : சுசீலா நாள் : 04.02.2026

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் 12/12, புதூர் பெருமாபாளையம், துய்யம்பூந்துறை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என் தகப்பனார் கதவு எண்.13/12 என்ற முகவரியில் குடியிருந்து வருகிறார் என்றால், இல்லை, கதவு எண்.12/12-ல் ஒன்றாக குடியிருந்து வருகிறார். எனக்கு எழுதப், படிக்க தெரியும். 01.08.2025-ம் தேதி இதே வழக்கில் எனது தகப்பனார் சின்னசாமியை விசாரித்தபோது, கதவு எண்.13/12 என பிரமாண பத்திரிக்கையில் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். என் தகப்பனார் பெயரில் 1992-ல் பட்டா வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 அவருக்கு வழங்கப்பட்ட பட்டா ஆகும். நான் குடியிருக்கும் இடம் 2789 சதுரடி ஆகும். அதன் பழைய க.ச.எண், புதிய க.ச.எண் எனக்கு தெரியாது. நான் திருமணம் ஆனதிலிருந்து, அங்கு தான் ஒன்றாக குடியிருந்து வருகிறேன். வழக்கு சொத்தில் ஒரே வீடு தான் உள்ளது. கதவு எண்.13/12 என்பது தனி வீடு தான், ஒரே காம்பவுண்டுக்குள் அமைந்துள்ளது. ஒரே காம்பவுண்டில் இரண்டு கதவு எண் கொண்ட வீடு உள்ளது என்றால், சரிதான். என் கணவர் பெயர் கேசவன். எனக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். மகன் பெயர் மணிவண்ணன். வா.சா.ஆ.2 ஆவணத்தில், பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்த ஆவணத்தில் 4-வது பக்கத்தில் முதல் சாட்சியாக எனது பெயர், கையொப்பம் உள்ளது என்றால், சரிதான், கடன் பாதுகாப்பிற்காக தான் கையொப்பம் செய்தேன். 2-வது கையொப்பம் என் மகன் மணிவண்ணனின் கையொப்பம் ஆகும். மேற்படி ஆவணத்தில் 25.07.2017-ம் வருடம் கையொப்பம் செய்தோம். எத்தனை மணிக்கு கையொப்பம்

செய்தோம் என்றால், நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் பதிவாளர் அலுவலகத்தில் இன்னார் என்று நிரூபிக்கும் இடத்தில் முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான், ஆனால் நான் பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் இன்னார் என்று நிரூபிக்கும் இடத்தில் 2-வது சாட்சி கையொப்பம் என் மகனுடையது, அவரும் பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை. என் தகப்பனார் சின்னசாமியும் பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் பத்திரம் தயார் செய்பவர் முன்னிலையில் எங்கு வைத்து கையொப்பம் செய்தீர்கள் என்றால், ரங்கம்பாளையத்தில், ரூம்-ல் வைத்து பெறப்பட்டது, எந்த வீதி என்று எனக்கு தெரியாது. உடன் யார் யார் இருந்தார்கள் என்றால், நான், என் மகன் மற்றும் வாதி ஜெயபிரகாஷ் இருந்தார்கள். பிரதிவாதியான என் தந்தை ரூமிற்கு போன விபரம் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்த தேதி அன்று என்னுடைய தகப்பனார் தொகை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியதால், நானும், என் மகன், எனது தந்தை ஒன்றாக சேர்ந்து போய் பணம் பெற்றோம், பணம் கடனுக்காக தான் பெற்றோம். எங்கு போய் பணம் வாங்கினீர்கள் என்றால், அவர் வீட்டிற்கு சென்று தான் வாங்கினோம். எத்தனை மணிக்கு சென்று வாங்கினீர்கள் என்றால், மாலை நேரத்தில் வா.சா.ஆ.2 தேதியில் சென்று வாங்கினோம். இந்த வழக்கில் வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால், பொய்வழக்கு போட்டுள்ளார். வாதி தரப்பில் யார் யாரை விசாரித்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. வாதி தரப்பில் என்னென்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில், 3-வது பத்தியில் வாதி எதற்காக தாவா தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமும், என் தகப்பனார்

என்ன எதிர்வாதம் செய்து வருகிறார் என்ற விபரமும் முழுவதும் தெரியும் என குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால், சரிதான். ஏற்கனவே வாதி வழக்கு தாக்கல் செய்த விபரமும், தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி நீங்கள் கூறிவிட்டு, தற்போது தாவா விபரங்கள் தெரியும் என பொய் கூறுகிறேன் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி நான், என் மகன், என் தகப்பனார் ஆகியோர் பதிவு அலுவலகத்திற்கு சென்று, பதிவாளர் முன்னிலையில் ரூ.3 லட்சம் தொகை பேசி, ரூ.2,50,000/- முன்பணம் பெற்று, இன்னார் என்று நிரூபிக்கும் இடத்தில் முதல் சாட்சியாக நானும், இரண்டாவது சாட்சியாக என் மகனும், மற்றும் பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் இடத்தில் முதல் சாட்சியாக நானும், இரண்டாவது சாட்சியாக என் மகனும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றால், நாங்கள் கடன் பாதுகாப்பிற்காக தான் கையொப்பம் செய்தோம். என் மகன் மணிவண்ணன் என்ன படித்துள்ளார் என்றால், DME படித்துள்ளார். இந்த வழக்கில் எனது மகனை சாட்சியாக விசாரிக்க தயராக உள்ளோமா என்றால், வழக்கறிஞரை கேட்டு சொல்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**